[1972 மார்ச் 25]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியொன்றும் திட்டம் இல்லை. எத்தனை பேர் கடன் உதவி பெற்றிருக்கிறார்கள், அவர்களில் ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர் என்ற விவரம் என்னிடம் இல்லை. ஆனால், சில பேர் கடன் வாங்கிக்கொண்டு இன்னும் திருமணம் கூட செய்யாமல் இருக்கிறார்கள்.

கன்னர் திரு ஆறுமுகத்தின் குடும்பத்திற்கு நிதி உதவி.

***692 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டிற்காக தன் இன்னுயிரைத் தியாகம் செய்த வட ஆர்க்காடு ஜில்லாவைச் சேர்ந்த கன்னர் ஆறுமுகத்தின் குடும்பத்திற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

(உ) வீரர் ஆறுமுகத்தின் மனைவி தனக்கு ஒரு வீடு கட்டித் தர வேண்டுமென்று அரசைக் கோரியுள்ளாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) உயிர் நீத்தார் சிறப்பு நிவாரண நிதியாக ரூ. 5,000 திரு கன்னர் ஆறுமுகத்தின் மனைவி திருமதி முனியம்மாளுக்கு வழங்கப் பட்டுள்ளது. மேலும் திரு ஆறுமுகத்திற்கு வீரச் சக்கர விருது வழங்கப் பட்டுள்ளமையால், அதற்குரிய அரசின் பரிசுத் தொகையான மேலும் ரூ. 5,000 வழங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் விரைவில் அத்தொகையை வழங்குவார்.

(உ) ஆம்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, கன்னர் ஆறுமுகம் தமிழகத் திற்கு நல்ல சிறப்பான புகழைத் தேடித் தந்திருக்கிறார். அவரைப் போன்ற மூன்று வீரர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இறந்திருக்கிறார்கள். தமிழகத்திலே வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் அதிகமான வீரர்கள் இறந்திருக்கிறார்கள். எனவே அந்த மாவட்டத் திற்கும் ஒரு சிறப்புப் பரிசு அளித்தால், அது மற்ற மாவட்டங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும். அரசாங்கம் அதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதில் குறிப்பிடப்பட்ட கேள்வி வீரர் ஆறுமுகத்தின் குடும்பத்தைப் பற்றியது. ஆறுமுகத்தின் மனை விக்கு மாநில அரசாங்கம் 5,000 ரூபாய் வழங்கியுள்ளது. அவருக்கு வீரச் சக்கர விருது கிடைத்ததன் மூலம் அதற்குரிய தொகையாக 5,000 ரூபாய் கிடைக்கும். மூன்று ஏக்கர் புஞ்சை நிலம் கொடுக்கப்படுகிறது. சாகுபடிக்கு அரசு மானியமாக ரூ. 2,000 வழங்கப்படுகிறது. இவை தவிர, பொது மக்கள் 2,000 ரூபாய் நிதி திரட்டி கொடுத்திருக்கிறார்கள்,

தமிழகத்தைப் பொறுத்தவரையில், 107 பேர் உயிர் நீத்திருக்கிறார்கள். அதில் 40 பேர் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நாற்பது பேர் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்ததால் அதற்கென்று தனிப் பரிசு வழங்க இயலாது. ஏனெனில் இறந்தவர்கள்தான் வீரர்கள் என்று சொல்ல முடியாது. காயமுற்றவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். எல்லோருக்கும் சந்தர்ப்பம் வந்திருந்தால் செத்திருப்பார்கள். சாகாதவர்களும் வீரர்கள்தான்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மதுரை மாவட்டத்தில் வாகைக் குளம் என்ற இடத்தைச் சேர்ந்த செல்வராஜும், நிலக்கோட்டையைச் சேர்ந்த ராஜமாணிக்கமும் வீர மரணம் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்திற்கும் அரசு உதவி அளித்திருக்கிறது. ஆனால், அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் இன்னும் கொடுக்கப்படவில்லை என்று மாவட்டக் கலெக்டர் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நிலம் கொடுக்கப்படுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதை ஒரு மூலக் கேள்வியாகப் போட்டிருந்தால் விபரமாகப் பதிலளித்திருக்க முடியும். இப்போது விபரம் இல்லை. மற்ற வீரர்களுக்கு அளிக்கப்பட்ட நிதி உதவி அவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருப்பதாக அவர்களே சொன்னார்கள். நிலம் கொடுக்கப்படாததற்கு வேறு ஏதாவது காரணம் இருக்கும் என்று கருதுகிறேன். விசாரித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் கேட்கக் கூடிய கேள்விகள் மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டும். இல்லையென்றால், அனுமதி மறுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, நம்முடைய மாநில அரசாங்கம் உயிர் துறந்த வீரர்களுக்கு 5,000 ரூபாயும், மற்றும் சில உதவிகளும் அளிக்கிறது. இவை மத்திய அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி செய்யப்படுகின்றனவா ? அகில இந்திய அடிப்படையில் மற்ற மாநிலங்களிலும் இது போல் உதவி செய்கிறார்களா ? அல்லது நம்முடைய மாநிலத்தில் மட்டும்தான் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மற்ற மாநிலங்களில் கொடுக்கின்றார்களா என்பது தெரியாது. நம்முடைய மாநிலம் கொடுத்து வருகிறது. ஏற்கெனவே மத்திய அரசாங்கத்திலிருந்து, வீரர்களை ஊக்குவிக்கின்ற முறையில் வீரச்சக்கரம், மகாவீரச் சக்கரம், சேனா சக்கரம் போன்ற விருதுகளை வழங்கி, அதற்குரிய தொகையைக் கொடுத்து வருகிறார்கள். அவர்கள் கொடுத்து வரும் பணத்தை, ஏற்கெனவே இருப்பதைவிட நாம் உயர்த்திருக்கிறோம். ஏற்கெனவே 3,000 ரூபாய் இருந்தால் அதை 5,000 ஆகவும், 5,000 இருந்தால் 10,000 ஆகவும், 10,000 இருந்தால் 15,000 ஆகவும் ஆக்கியிருக்கிறோம். அந்த நேரத்தில் இந்தியாவிலேயே நம்முடைய தமிழகம்தான் முதன்முதலாக இப்படிச் செய்கிறது என்று பாராட்டிப் பேசினார்கள். அதுதான் எனக்குத் தெரியும்.